முருகப்பெருமான் துணை

**மகான் பிடிநாகீசர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

10.10.2021, ஞாயிற்றுக்கிழமை

1. கருணை கொண்டு உலகினை
   காக்க வந்தநல் அண்ணலே
   தருமலோகம் படைக்க வேண்டி
   தவசியாக வந்தநல் வள்ளலே
2. வள்ளலே ஆறுமுக அரங்கனே
   வையகத்தில் உன் பெருமை கூறி
   வல்லமையான பிலவ தரிவை திங்கள்
   வகைபட அறுநான்குதிகதி கதிர் வாரம்
   (பிலவ வருடம் புரட்டாசி மாதம் 24ம் நாள், 10.10.2021 ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் துல்லிய ஆசிதனை
   வழங்குவேன் பிடிநாகீசர் யானும்
   சோரமிலா உலகம் அமைய உரைப்பேன்
   சுருதிபடி மக்களை காத்தருள
4. காத்தருள வந்த மாதவசி
   கந்தனின் அவதார ஞானி
   காத்திடும் ஆறுமுக அரங்கனை
   கலியுகமக்கள் கண்டு வணங்கி
5. வணங்கி திருவடி பற்றியே
   வல்லமை கூட்டும் தருமத்தை
   இணங்கியே உலகமக்களெல்லாம்
   எல்லாத் திக்கிலும் செய்து கொண்டு
6. கொண்டுமே முருகா அரங்கா எனும்
   குறையிலா செபதபம் முழங்கி
   தொண்டுமிக செய்து நன்கு
   தேசிகன் அருள்பெற்ற சீடர்களாகி
7. ஆகியே அகிலத்தை மாற்றும்
   ஆற்றல் மிக்க ஞான வான்களாய்
   மகிழவே வரங்கள் பெருகி
   மண்ணுலகை மகத்துவமிக்க பூமியாக
8. பூமியாக மாற்றி வழிநடத்தி
   புண்ணிய பலம் எங்கும் நிரப்பி
   நேமமிக்க மக்கள் படைகளாக
   நிலவுலகோர் சிறந்து இனிதே

9. இனிதே உலகமாற்றம் புரிவர்
ஏழாம்படை வீடு படைத்த ஞானி
கணிவான வழிகாட்டல் தன்னால்
கலியுகம் தீதான நிலைகளை அகற்றி

10. அகற்றியே ஞானவான்களை அடைந்து
அதிகார வர்க்கம் ஆளுமை என
செகத்தில் யாவரும் அரங்க ஞானி
சிறப்பான வழிகாட்டலுக்கு வர

11. வருகவே ஞானத் தலைமைகளாகி
வையகம் ஞான ஆட்சி பெறும்
முருகப் பெருமான் தலைமை உருவாகும்
மொழிந்திட்ட துல்லிய ஆசி முற்றே

–சுபம்–